ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2029/18 - 2017 ජූලි 25 වැනි අඟහරුවාදා - 2017.07.25
*2029/18 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு யூலை மாதம் 25 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப்படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் காணி மற்றும் பாராளுமன்ற மறு சீரமைப்பு அமைச்சர் கயந்த கருணாதிலக்க ஆகிய நான், இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

வட மாகாணத்தில், யாழ்ப்பாணம் மாவட்டத்தில், நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில், இல. ஜே/ 105, கந்தர்மடம் தென்கிழக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில், வண்ணார் பண்ணை கிராமத்தில் அமைந்துள்ள நில அளவை மா அதிபரால் 2016.09.06 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட வைஏ/என்எல்எல்/2016/237 ஆம் இலக்கம் கொண்ட முதற் சுவட்டு வரைபடத்தில் குறிப்பிடப்பட்ட சுமார் 0.0328 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட துண்டு ‘ஏ’ எனும் காணித்துண்டின் எல்லைகள் :

**துண்டு ‘ஏ’ - ஆவரந்துலக்கை - விஸ்தீரணம் : சுமார் 0.0328 ஹெக்டயார்**

வடக்கு : ஒழுங்கை ; கிழக்கு : ஒழுங்கை மற்றும் கால்வாய் ; தெற்கு: கால்வாய், ஆவரந்துலக்கை, சேதுபதி மகேஸ்வரி மற்றும் அருள்ராஜசிங்கம் மதுரா ஆகியோரின் ஆதனம் ; மேற்கு : ஆவரந்துலக்கை, அருள்ராஜசிங்கம் மதுராவின் ஆதனமும் ஒழுங்கையும்.

கயந்த கருணாதிலக்க,
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர்.

குறிப்பு இலக்கம் : 4-3/4/2016/டபிள்யூஎஸ்/204.
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு,
“மிஹிகத மெதுர”,
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2016, யூன் 21.

*8 - 296*

1A - G25962 - 08 (2017/07) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.
இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.